இடங்களில் பால் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: தமிழக அரசுப் பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கும், அங்கன்வாடி குழந்தைகளுக்கும் சத்தான ஆவின் பால் பவுடர் வழங்க வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

5. அறிவிப்பு

பேரவையின் மாலை கூட்டநேரத்தில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் பேரவை மாலை கூடும் நாட்களில் மாலை 4—00 மணிக்குக் கூடலாம் என முடிவெடுக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டது. தற்போது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருடைய ஆலோசனைகளையும், கருத்துகளையும் ஏற்று, இக்கூட்டத் தொடரில் பேரவை மாலையில் கூடும் நாட்களில் மாலை 5—00 மணிக்குக் கூடும் என்பதை பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருடைய கருத்துகளையும் ஏற்று, மாண்புமிகு அமைச்சர்கள் தங்களது பதிலுரையை இன்று மாலை 5—00 மணிக்கு அளிப்பார்கள் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் மாலை 5—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

2023 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் தலைமையில் பிற்பகல் 5–00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 5–வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

(இ) கோரிக்கை எண் 7–மீன்வளம் மற்றும் மீனவர் நலன் தொடர்ச்சி (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை

(ஈ) கோரிக்கை எண் 8–பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

} *தொடர்ச்சி*

– – –

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் எங்கள் உயிர் மூச்சு; தஹி, தஹி தமிழ்நாட்டிற்கு தஹி—அவர்கள் பாஷையில் சொல்ல வேண்டுமென்றால்— இங்கே நஹி, நஹி. (மேசையைத் தட்டும் ஒலி) தயிரை நாம் தயிர் என்போம்; பாலை நாம் பால் என்போம். தமிழே எங்கள் உயிர் என்போம். பால் இங்கு* Doodh *ஆகாது; தயிர் இங்கு தஹி ஆகாது. அந்தி வந்தால் நிலவு வரும்; இந்தி வந்தால் கடும் எதிர்ப்பு வரும்*